மின்துறை,

புதுவைஅரசு

செய்திகுறிப்பு

13.08.2020

குறைந்த மின்னழுத்த நுகர்வோர்களின் மின்கட்டண முறை:

கோவிட்-19 தீவிர நோய் தொற்றைக் கருத்தில் கொண்டு 24.03.2020 நள்ளிரவு முதல் புதுச்சேரி மாநிலத்தில் ஊரடங்கு நடைமுறைக்கு வந்ததால், மீட்டர் அளவீடுகளின் அடிப்படையில் ஸ்பாட் பில்லிங் நிறுத்தப்பட்டது. ஊரடங்கு அறிவித்ததில் இருந்து நுகர்வோருக்கான மாதாந்திர சராசரி மின் நுகர்வு பட்டியல் விபரங்கள், இத்துறையின் வலைதளம் https://pedservices.py.gov.in மற்றும் வசூல் மையங்களில் மின் நுகர்வோர்கள் அறிந்துகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது.

ஊரடங்கு படிப்படியாக தளர்த்தப்பட்டதை தொடர்ந்து, மின்நுகர்வின் அடிப்படையில் 10.07.2020-யில் இருந்து மின் கணக்கீடு மீண்டும் நடைமுறைக்கு வந்தது. ஊரடங்கு காலத்திற்கு முந்தைய மாத சராசரி மின் நுகர்வின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட மின் கட்டணம், ஊரடங்கு கால மொத்த மின்நுகர்வு மாதங்களின் எண்ணிக்கையில் பிரித்து கணக்கிடப்பட்டுள்ளது. ஒரு மாதத்திற்கான மின்தொகை 2019-2020 ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட மின்கட்டண அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது. சராசரி கணக்கீடு காலகட்டத்தில் செலுத்திய தொகை, கட்டவேண்டிய மொத்த தொகையில் கழித்து மீதமுள்ள தொகை மட்டுமே நுகர்வோரிடம் இருந்து வசூலிக்கப்படும்.

மாண்புமிகு மத்திய இணை மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட 2020-2021 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்ணயிக்கப்பட்ட மின்கட்டண பட்டியலின் அடிப்படையில், 01.06.2020 முதல் அடுத்தடுத்த மாதங்களில் மின்நுகர்வு கணக்கிடப்பட்டு மின்கட்டணம் பிறகு வழங்கப்படும் மின் கட்டண பட்டியலில் வசூலிக்கப்படும்.

மேற்கூறிய மாதிரி மின் கணக்கீட்டு முறையில் மின் நுகர்வோர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட மின் கட்டணத்தை தவிர்த்து அதிகப்படியான வரி ஏதும் விதிக்கப்படவில்லை. ஆனால் வீட்டு மின் உபயோகம் இந்த காலகட்டத்தில் ஏசி மற்றும் மின்விசிறிகள் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளதால், பொதுவாக மற்ற நேரங்களைவிட ஊரடங்கு காலத்தில் மின் உபயோகம் அதிகமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 300 யூனிட்டுகளுக்கு அதிகமாக உபயோகத்திருக்கும் மின் நுகர்வோர்களுக்கு ஒரு யூனிட்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட ரூ.5.60 விதிக்கப்படுகிறது.

மேலும் மின் நுகர்வோர்கள், ஆன்லைன் டிஜிட்டல் பண பரிவர்த்தனையை மின்துறை வலைதளம், கைபேசி செயலிகளான **BHIM, Paytm, Phone pe, Mobikwik, Amazon Pay** மற்றும் **Google Pay** ஆகியவற்றை பயன்படுத்தி மின்கட்டணத்தை செலுத்தி மின் கட்டணம் வசூல் மையம் வருவதையும் மற்றும் கோவிட்-19 தொற்று பரவுவதையும் தவிர்க்கலாம்.

மாதிரி மின் கணக்கீட்டு முறை வீட்டு உபயோக மின் நுகர்வோரின் புரிதலுக்காக கீழே விவரிக்கப்பட்டுள்ளது.

| *ஊரடங்கு காலத்திற்கான மின்கட்டண விபரம் பின்வருமாறு* | | | |
|---|---|---|---|
| | | *உதாரணம்-1* | *உதாரணம்-2* |
| **சராசரி கணக்கில் எடுத்துக்கொண்ட மாதங்கள்** | A | 4 மாதம் | 4 மாதம் |
| **நுகர்வோரால் கட்டப்பட்ட பணம்** | | ரூ.200 | ரூ.500 |
| **மொத்த நுகர்வு (தற்போதைய நுகர்வு - முந்தைய நுகர்வு) (மின் அளவி கணக்கீட்டின்படி)** | B | 800 Units | 2000 Units |
| **ஒரு மாதநுகர்வு (B/A)** | | 200 Units | 500 Units |
| *2019-20 ஆண்டிற்கான வீட்டுமின் உபயோக நிர்ணயிக்கப்பட்ட விலைப்பட்டியல்* | | | |
| 1-100 யூனிட் (ரூ.1.50/யூனிட்) | C | ரூ.150 | ரூ.150 |
| 101-200 யூனிட் (ரூ.2.50/யூனிட்) | D | ரூ.250 | ரூ.250 |
| 201-300 யூனிட் (ரூ.4.35/யூனிட்) | E | - | ரூ.435 |
| >300 யூனிட் (ரூ.5.60/யூனிட்) | F | - | ரூ.1120 |
| **நிரந்தர கட்டணம்** | G | ரூ.40 | ரூ.40 |
| *ஒரு மாதத்திற்கான மொத்த நுகர்வு கட்டணம் ( C+D+E+F+G)* | *H* | *ரூ.440* | *ரூ.1995* |
| **கூடுதல் வரி (முந்தைய மாத மின் நுகர்வில் 4%)** | *I* | *ரூ.18* | *ரூ.80* |
| **ஒரு மாதத்திற்கான மொத்த நுகர்வு (H+I)** | J | ரூ.458 | ரூ.2075 |
| **சராசரி மின் உபயோகத்திற்கான சரியான தொகை ( J X 4 மாதம்)** | K | ரூ.1832 | ரூ.8300 |
| **சராசரி மின் அளவு காலத்தில் நுகர்வோர் செலுத்திய பணம்** | L | ரூ.800 | ரூ.2000 |
| *செலுத்த வேண்டிய பணம் (K - L)* | | *ரூ.1032* | *ரூ.6300* |